என்னும் குணப் பெயர் வினைமுதற்றொழிற் பயனுறப்படு முடைமைக் குணப்பெயராய் நின்று பிள்ளையாரது திருவடிகள் தம்மை அடைந்தோர்க்கு வரையாது ஆனந்தப் பேற்றை அளித்து அவரைத் தாங்கிக்கோடலைக் குறித்த தென்று உணர்க. அஃதேல் ஆனந்தப்பேற்றைத் தருதற்குந் தாங்கிக் கோடற்குங் கருத்தர் பிள்ளையாரன்றோ? அங்ஙனம் இருப்பத் திருவடிகட்கு இங்ஙனங்கூறல் எங்ஙனமெனில்:- திருவடிகள் தம்மை வழிபடுவோர்க்கு இரங்கி இன்பமீதற்பொருட்டு எழுந்தருளும் பிள்ளையாரது படர்ச்சி நிகழ்ச்சிக் கருவியாய் நின்று அவரை அவ்வழிபடுவோர்பால் வருவித்தலானும், ஞானதீக்கை பண்ணுங்கால் அவர் சென்னியிற் சூட்டப்பட்டு ஐக்கியம் வருவித்தலானும், நித்தியானந்தப் பேறுவாய்க்கு மாகலின் இங்ஙனமென்க.

அல்லதூஉம், வாட்டமில் அருளும், கோட்டமில் குணனும், அசையா நிலையும், நசையா மனனும், வெகுளாப் பண்பும், விடாப் பேரன்பும் செவ்வியின்மரீஇ எவ்வெவர் எவ்வகை வேட்டனர் அவ்வகை விருப்பொடு குறிப்பின் வரையாதீதல் வள்ளற்றன்மை என்பவாகலின், இவ்வள்ளற் றன்மையைத் தம்பால் அடைந்தோரிடை அடைவித்தருளும் கருணைபற்றி அங்ஙனங் கூறியதெனினும் அமையும் என்க. அஃதேல் வள்ளற் றன்மை வழங்கு மலர்போலுந் திருவடி யென்றன்றோ உரை விரித்தல் வேண்டும், அங்ஙனமன்றி வள்ளற்றன்மை யுடைய மலர்போலுந் தாளென விரித்திருக்கின்றதே எனின்; அங்ஙன மடைவித்தலும் வள்ளற் றன்மையே யாகலினும் உடைய தொன்றன்றே உதவப்படு மாகலினும் இங்ஙனம் விரித்தல் அங்ஙனம் கூறற்கும் அமைதியாம் என்க.

அல்லதூஉம், அருளின்றி அமையாத வள்ளற் றன்மைக்கு அவ்வருளே முதற்காரணமா மாகலின், ஆனந்த வடிவராகிய பிள்ளையார் அவ்வானந்தப் பேற்றை அளிக்கும் வள்ளற் றன்மைக்கு முதற் காரணமாகிய திருவருட்சத்தியே திருவடி என்று குறித்தற்குக் காரணத்தைக் காரியமாக ஈண்டு உபசரித்த தெனினும் அமையுமென்க.

அல்லதூஉம், எமது திருவடிகளை வழிபடின் வீட்டின்பம் எளிதில் தருவேம் என்று பிள்ளையார் விதித்தருளிய அருள்

விதிப்படி அறிந்து வழிபடின், அவ்வழிபாட்டால் அவ்வீட்டின்பந்தரப்பெறுதல் உண்மையாகலின், அவ்வுண்மை நோக்கி ஈண்டுக் கூறியதெனினும், பிள்ளையார் திருமேனி முற்றுந் தெய்வத்தன்மை பூரணமாகலின் அதனை யறிவிக்க ஈண்டுக் கூறியதெனினும் அமையுமென்க. திருவடிகட்கு அடையாய வள்ளல் என்பதூஉம் ஆசிரியர் பெயராய வள்ளல் என்பதூஉம், அடிஇணை எதுகைத் தொடையாய் எழுத்து அசை சீர் ஒலி பொருளாதிகளால் ஒற்றுமை கொண்டு நின்று பிள்ளையாரது திருவடித் தீக்கைக்கும் ஆசிரியர் அதிபக்குவத் தன்மைக்கும் உள்ள ஒற்றுமைப் பொருத்தம் விளக்கின என்க.

வள்ளல் என்பது பிள்ளையார்க்குக் காரணச் சிறப்புப் பெயராகக் கொண்டு பொருள் கூறுவாறும் உளர். அங்ஙனங் கூறின், இத்துணைச் சிறப்பின்று என்று மறுக்க. என்னெனின், அவயவச் சிறப்பால் அவயவிக் குணம் வெளிப்படுத்தலே பெரும்பாலும் இன்பமாகலில் என்க. இதனைப் "போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்" என்பதனாற் காண்க என்க. வள்ள மலர்த்தாளெனப் பாடமோதி வள்ளம் போலுங் குவிந்த வாய்மலரென மலர்க்கடையாக உரை விரிப்பாரும் உளர். அங்ஙனம் விரித்தலின் இத்துணைப் பெரும்பயனின்றென மறுக்க. இங்ஙனம் இன்னும் விரிக்கிற் பெருகும் என்க.

TRANSLATION – In the phrase *vaḷḷal malarttāḷ*, "bountiful flower-feet", a phrase with one kind of beauty, two kinds of junction and three words compounded, the quality-noun *vaḷḷal* stands as a quality-noun of possession whose fruit is received from the agent's action. Know that it indicates that Pillaiyar's holy feet give the attainment of bliss without limit to those who reach them, and uphold them. If so, is not Pillaiyar the agent who gives the attainment of bliss and upholds them? That being so, how can this be said of the feet? It is said so for these reasons. Pillaiyar, pitying those who worship his feet, comes forth to give them joy; the feet are the instrument of his going and coming, and bring him to those worshippers. And when he gives initiation into

wisdom (*ñāṉatīkkaiy*), the feet are placed on the disciple's head and bring about oneness (*aikkiyam*). So eternal bliss is gained.

Or again: they say that bounty is this: grace that never withers, virtue that never bends, a stance that never wavers, a mind that never craves, a nature that never angers, and great love that never lets go, all joined in their season; and giving without limit, to whoever wishes in whatever way, in that very way, with goodwill and with discernment. So it may also be said because of the compassion with which the feet make this bounty arise in those who reach them. Then should not the commentary have expanded it as "the flower-like feet that bestow bounty", and not, as it has, "the flower-like feet that have bounty"? Since making others attain it is itself bounty, and since only what one has can be given, expanding it this way fits that meaning too.

Or again: bounty cannot exist without grace, so grace is its first cause. Pillaiyar, whose form is bliss, has the bounty that gives the attainment of bliss, and its first cause is the power of divine grace (*tiruvaruṭcatti*). To indicate that the holy feet are this power of grace, the cause may here be spoken of as the effect.

Or again: Pillaiyar laid down a rule of grace: "If you worship Our feet, We will give the bliss of liberation (*vīṭṭiṉpam*) with ease." If one knows it and worships by that rule, the bliss of liberation is truly given through that worship; it may be said here in view of that truth. Or it may be said here to make known that divinity is complete in the whole of Pillaiyar's sacred body. *Vaḷḷal*, the epithet of the feet, and *Vaḷḷal*, the author's name, stand as the rhyme (*etukai*) that pairs the two lines, one in letter, syllable, foot, sound and meaning; and they make clear the fitting oneness between Pillaiyar's initiation by the feet and the author's state of high ripeness.

There are some who explain *vaḷḷal* here as a special name, given for a reason, for Pillaiyar himself. If they say so, refute it: it has not this much excellence. Why? Because to show the quality of the whole through the excellence of a limb is, for the most part, the greater delight. See this in "Praise to the lotus that Mal and the four-faced one could not see". There are some who read *vaḷḷa malarttāḷ* and explain it as "the flower with its mouth closed like a cup", ending the comparison in the flower. Refute it: expanding it so has not this great fruit. To expand this further would make it grow too long.

COMMENTARY – The two junctions are *vaḷḷal* + *malar* (the l becomes ṉ: *vaḷḷaṉmalar*) and *malar* + *tāḷ* (the t is doubled: *malarttāḷ*). Bounty belongs to the feet, but its fruit falls to those who come to them. The feet carry the guru to the worshipper, and in the initiation of wisdom the guru's feet rest on the disciple's head and make them one. Bounty is never-failing grace, virtue, steadiness, freedom from craving and anger, and love that does not let go, given to each as each needs. Its root is grace itself. The same word, *vaḷḷal*, names the author in line 1 and the feet in line 2: the feet that give and the soul ripe to receive rhyme. The quotation is from the Tiruvasagam (Tiruvempavai 20): praising the feet praises the whole Lord.

13. THE FLOWER-FEET

> மலர் என்பது வள்ளற் றன்மையின் அருகு வைத்தமையின்,
> ஈண்டு நிறைதலுங் குறைதலுமாய் உள்ள நீர்நிலைக்கண்
> தோன்றியும் அழிந்தும் விரிந்தும் குவிந்தும் வாடியும் நின்று,
> வண்ணமும் நறையும் வாசமும் சிறிதே சிறுபோது கொண்டு
> பறித்தலாதிய சிறுதொழிற்படும் மலர்களை நீக்கி, ஆண்டுத்
> திரிபிலாத் தெய்வத் தெண்ணீர் நிலைக்கண் ஒழியாமலர்ச்சியும்
> அழியாமணமும் பொன்னிறப்பொலிவும்
> இன்னறவொழுக்கும் மென்மையுந் தண்மையும்

வியப்புறுமுருவும் கண்டோர் கண்கவர்காட்சியும் மாட்சியுங் கொண்டு முக்காலமுங் குன்றா மலரைக் குறித்தமை காண்க. என்னெனில் பிள்ளையார் திருவடிகள் மெய்ஞ்ஞான விளக்கமாய் அருண்மணம்வீசிப் பொன்னிறம்பொலிந்து ஆனந்தமொழுக்கி மெல்லெனவுற்றுத் தண்ணெனக்குளிர்ந்து தரிசிக்கின்றோர் வியப்புறுமுருவாய் அவரது விருப்பநோக்கம்பரவ என்றும் ஒரு தன்மையவாய் இருக்கின்றமையின் என்க. ஆயின் மலர் போலுந் தாளென்று உவமை விரிந்தபடி நிற்றற்கு இடங்கொடாது மலர்த்தாளென்றது என்னெனின், அத்தெய்வத் திருமலர்தனைக் கண்டோர்க்குச் சிறிய விடயானந்தந் தருதலேயன்றித் திருவடிபோற் சிவானந்தந் தரமாட்டாச் சிறுமை நோக்கி என்க.

அல்லதூஉம், சுபவடிவாய் எவ்வகைச் சுபங்கட்கும் முன்னின்று அதனை விளங்குறச் செய்வதாய் மகிழ்வுடையோர் யாரும் மேற்கொண்டணியப்படுவதாய் நிற்கும் நன்மலர் போலும் எனக் கூறினும் அமையும்; என்னெனின், திருவடிகள் அருள் வடிவாய் ஆனந்தப் பேற்றிற்கு முன்னின் றளிப்பதாய் அறிவுடையோர் தம் தலைமேற்கொண்டு அணியப்படுவதாய் நிற்றலின் என்க.

அல்லதூஉம், மலரை அடைந்த வண்டுகள் அதனது தேனுண்டு களிகொள்ளுதல் போல் திருவடிகளை அடைந்தோரும் அருளானந்தம் பெற்று இறுமாத்தலின் இங்ஙனம் கூறிய தெனினும் அமையும் என்க. இதனைத் தொகையுவமை அணியாகக் கூறலின்றி வள்ளன் மலர்த்தாளெனக் கூட்டி அற்புதத் தொகையுவமை யணியாகக் கொண்டு பொருள் கூறுவாரும் உளர். அவர் கூறுங் கூற்றிற் பெரும் பயனின்றென மறுக்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகு மென்க.

தாள் என்பது அடிகட்கன்றியும் முயலுதற்கும் உண்ணின்ற பொருள் வெளிப்படாமைக்கும் அதனை வெளிநின்றோர் உட்சென்று கவரப்படாமைக்கும் காப்பாகக் காப்பினிற்குங் கருவிக்கும் அணிதற்கணியின் இருகடையும் இணைத்து நிற்கும் இடைப்பூட்டிற்கும் இடனாகி வந்த பலபொரு ளொரு சொல் லாகலின், திருவடிகள் தம்மை அடைந்தோரை ஆனந்த

> நிலையுட் சேர்த்தலும் அங்ஙனஞ் சேர்ந்தோர் மீட்டும்
> அவ்வானந்த நிலையினின்றும் போத அசைவு தோற்றி
> வெளிப்படாமைக்கும் அவத்தைகளுள் சென்று தாக்கிக்
> கவரப்படாமைக்கும் காப்பாக அருளுருவாய் அதன்
> முன்னிற்றலும் சிவத்துடன் சீவனை இடைநின்று
> கூட்டுவித்தலும் குறித்தது காண்க. இக்குறிப்புணர்த்த வன்றே
> மலர்க்கால் என்னாது மலர்த்தாள் என்ற தென் றுணர்க.

TRANSLATION – Since *malar*, "flower", is set beside bounty, it shuts out here the flowers that appear and perish in pools that fill and drain; that open, close and wither; that keep colour, honey and fragrance for a little while only; and that suffer small deeds such as plucking. See that it indicates a flower in a changeless divine pool of clear water: a flower with unceasing bloom, undying fragrance, golden lustre, a flow of sweet honey, softness and coolness, a wondrous form, a sight that captures the eyes of those who see it, and majesty, never failing in all three times. Why? Because Pillaiyar's holy feet are the light of true wisdom. They spread the fragrance of grace, glow golden, let bliss flow, are soft to the touch and cool, are a wondrous form to those who behold them, drawing their loving gaze, and are always of one nature. Then why does he say "flower-feet", leaving no room for the open simile "feet like a flower"? Because of the smallness of that divine flower: to those who see it, it gives only a small sense-pleasure (*viṭayāṉantam*), and cannot give Siva-bliss as the holy feet do.

Or again, it may be said: "like a good flower, which is an auspicious form, stands foremost at every auspicious occasion and makes it shine, and is taken up and worn by all who are glad". Why? Because the holy feet are the form of grace, stand foremost and give the attainment of bliss, and are taken up by the wise and worn on their heads.

Or again: as bees that reach a flower drink its honey and grow drunk with joy, so those who reach the holy feet receive the bliss of grace and are lifted up in joy; it may be

said for this reason. Some do not take it as the ornament of the compressed simile (*tokai uvamai*), but join it as *vaḷḷaṉ malarttāḷ* and take it as the ornament of the wondrous compressed simile. Refute it: what they say has no great fruit. To expand this further would make it grow too long. *Tāḷ* is one word with many meanings. Besides feet, it is used for effort; for a bolt, the fastening that stands on guard so that what is inside does not come out and those outside cannot go in and seize it; and for the clasp in the middle that joins the two ends of an ornament. So see what it indicates. The holy feet bring those who reach them into the state of bliss. They stand before that state as the form of grace, on guard, so that those who have entered do not come out of it again when the knowing (*pōtam*) stirs, and are not attacked and seized by the states (*avattai*). And they stand between and join the soul with Siva. Know that it is to convey this that the verse says *malarttāḷ* and not *malarkkāl*.

COMMENTARY – An open simile, "feet like a flower", would make the flower the measure, and even a flower of heaven falls short: it pleases the senses but cannot give Siva-bliss. So the verse fuses the two into "flower-feet" (*tokai uvamai*, a simile with its "like" dropped). The feet are a flower that never fades, worn on the heads of the wise. Those who reach them are like bees drunk on honey. *Tāḷ* means foot, and also effort, a bolt and a clasp. Grace brings the soul in, bolts the door against the old stirrings, and clasps the soul to Siva. *Kāl*, the plain word for foot, carries none of this.

14. PLACED ON THE HEAD

> *தலைமேல் வைத்து என்பது ஆசிரியர் தம் ஆசாரியராகிய பிள்ளையார் திருவடி தீக்கை செய்யத் தாம் பெற்றமை குறித்தது காண்க. அஃதேல், வைக்கப்பட்டு எனச் செயப்பாட்டு வினையெச்சத்தால் இருத்தற் பாலதன்றோ*

> *எனின், ஆசிரியர்க்கு அத்திருவடிக்கண்ணே உள்ள பிரியத் தொடர்ச்சியின் பெருமை தோன்ற இங்ஙனம் நின்று அங்ஙனங் குறித்தது என்க. இதற்கு இவ்வாறன்றித் தலைமேல் பாவனையால் வைத்தெனக் குறித்ததென்று கூறுவாரும் உளராலோ எனின், அவ்வாறு கூறிற் பிள்ளையார் இந்நூலாசிரியர்க்கு ஞானாசாரியர் என்பதும் இவர் ஞானதீக்கை யுடையார் என்பதும் விளங்குதலின்றி மற்றை ஆசிரியர்போல் எடுத்த நூல் இனிது முடிதற்பொருட்டுப் பாவனையால் வழிபடு கடவுட் பழிச்சினர் என்று இலேசிற் கருதப்படுமாகலின் அங்ஙனங் கூறல் மரபன்றென்க. தலையில் வைத்து என்னாது தலைமேல் வைத்து என்றமையால், மறைமுடிக்கண்ணே வயங்காநின்ற அச்செல்வத் திருவடியின் சீர்மை தோன்றிற்று என்க.*

TRANSLATION – "Placing on his head" indicates that the author received initiation by the holy feet (*tiruvaṭit tīkkai*) from Pillaiyar, his teacher. If so, should it not stand as the passive participle *vaikkappaṭṭu*, "having been placed"? It stands as it does, and indicates as it does, to show the greatness of the unbroken love the author has for those holy feet. Some, unlike this, say that it means "having placed them on his head in contemplation (*pāvaṇai*)". If one says so, it would not be clear that Pillaiyar is the author's teacher of wisdom and that the author has received initiation into wisdom; it would be lightly taken that, like other authors, he praised his chosen deity in contemplation so that the book he had undertaken might be completed well. So to say that is not the tradition. And since he says "on the head" (*talaimēl*) and not "in the head" (*talaiyil*), the excellence of those precious holy feet, which shine on the crown of the Veda, is shown.

COMMENTARY – The verse says "placing", not "being placed": the disciple's own love holds the guru's feet on his head, and holds them still. This is a real initiation from a real teacher. It is more than the customary praise of a chosen deity at the start of a book. "On the head" also says

that the feet rest above, as on the crown of the Veda, its highest teaching.

15. HAVING DISCERNED

> *ஓர்ந்து என்பதில் ஓர் என்னும் பிறவினை முதனிலை, அறிவு தனக்கெதிரிட்ட உணர்ச்சிப் பொருட்கண் எதிரிடுவது போன்று எதிரிடாது உள்ளாழ்ந்த அப்பொருட்டிறன் எதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியும் எதிரிட்ட பின்னர் விகற்பியாது எதிர்க்குந்தொறும் எதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியுங் கோடலின் கருவித்திறனும் தன்திறனும் அருட்டிறனும் உற்றுணர்ந்து அவ்வுணர்ச்சி விகற்பியாது தேறிநின்றமையைக் குறித்தது காண்க. இக்குறிப்புத் தோன்றவன்றே திருவள்ளுவநாயனாரும் "ஓர்த்துள்ள முள்ளதுணரின்" என்றா ரென்று அறிக.*

TRANSLATION – In *ōrntu*, "having discerned", the transitive root *ōr* holds two movements. Knowing does not meet the object of feeling that faces it in the way ordinary knowing seems to; it sinks deep within, so that the very nature of that object comes to face it. And once it has faced it, each time it meets it, it faces it again without wavering. So see that the word indicates that he closely felt the nature of the instruments (*karuvi*), his own nature and the nature of grace, and stood clear, that feeling never wavering. To show this meaning, Thiruvalluvar Nayanar also said: "If the mind, having discerned, knows what truly is."

COMMENTARY – *Ōrtal* is to discern by sinking into a thing until its nature stands clear, and to stay clear without wavering. Three things are discerned: the instruments (the tattvas, seen to be inert), one's own nature, and grace. These are the three stages Vallalar named in section 3. The line is from the Kural (357): if the mind discerns and knows the Real, there is no need to think of another birth.

16. WHERE THE MIND HAS CEASED

உள்ளத் தழிவில் என்பதில் உள்ளம் என்பதன்
பகாப்பதவியீற்றுப் பகுபதப் பொருளின் இடவாகு பெயராய்
அணுப் பொருட்கண் வந்த உள் என்னும் பகுதி உட்புறத்தும்
அப்போதம் எழுஞ் சிற்றசைவும் பேரசைவுங் குறித்தது காண்க.

உள்ளம் என்பது வாதனையால் உள்ளெழும் போதத்திற்கு
ஆகுபெயராயது. வள்ளலென்பது போன்று ஒழுகிசையாய் வர
உள்ள வழிவில் என்னாது பொறுத்திசையாய் வர உள்ளத்
தழிவில் என்றது என்கொலோ எனின்:- வேற்றுமை
வழியாகலினும், போதவசைவு சார்பின்றி யமையாமை
குறிக்கவேண்டு மாகலினும், சாரியையோடு புணர்த்தி
அங்ஙனங் கூறியதென்க. அழிவு என்பதில் அழி என்னும்
பொதுவினைப்பகுதி முன்னர்த்தோற்ற நிகழ்ச்சிப் பின்னர் ஓர்
காலத்தும் ஓரிடத்துமின்றிக் கெடுதற் பெயர்ச்சிக்கண்
வந்ததாகலின், அப்போத நிகழ்ச்சி பின்னரெக்காலத்தும்
உட்புறமென்னு மெவ்விடத்துந் தோற்ற நிகழ்ச்சியின்றி
ஒடுங்கியவாறு குறித்த தென்று உணர்க. இங்ஙனமன்றி
உள்ளத்தழிவில் என்பதற்கு மனத்தின் அசைவற்ற
இடத்தெனப் பொருள் கூறுவாறும் உளராலோ எனின்,
மனத்தின் அசைவு போதவசைவறில் தானேயறும் ஆகலினும்
அஃதறாத விடத்து இஃ தெவ்வாற்றானும் அறாதாகலினும்
அது பொருந்தாதென்க. இதனை ஆசிரியர் கூறிய "பற்றாத
போதும் பதறும்" என்னும் திருவெண்பாவாற் காண்க என்க.

TRANSLATION – In *uḷḷat taḻivil*, "where the mind has ceased", the root *uḷ*, "within", of *uḷḷam*, "mind", a word that can be divided into root and ending, stands as a metonymy of place and came to mean the soul (*aṇu*). It indicates the small and great stirrings with which that knowing (*pōtam*) rises, within and without.

Uḷḷam is a metonymy (*ākupeyar*) for the knowing that rises within through latent impressions. Why does he not say *uḷḷa vaḻivil*, in a flowing sound, as with *vaḷḷal*, but *uḷḷat taḻivil*, in a held sound? Because it is a case relation (*vēṟṟumai*), "the ceasing of the mind"; and because it must indicate that the

stirring of knowing cannot exist without a support. So he joined it with the euphonic increment (*cāriyai*) and said it thus. In *aḻivu*, "ceasing", the common verb-root *aḻi* came in the sense of perishing, so that what once appeared and occurred never again appears, at any time or in any place. So know that it indicates how the occurring of that knowing subsided, never again appearing or occurring at any later time, in any place, within or without. Some, unlike this, explain *uḷḷat taḻivil* as "in the place where the mind is without movement". That does not fit: the movement of the mind ceases of itself when the stirring of knowing ceases, and where that stirring does not cease, the mind's movement will not cease by any means. See this in the author's holy venba "Even when it does not cling, it trembles".

COMMENTARY – "Mind" here names the soul's own knowing (*pōtam*), the sense "I know", stirred up by old impressions (*vātaṉai*). An *ākupeyar* is a word that names something closely tied to its first meaning. The two words *uḷḷam* + *aḻivu* could join smoothly as *uḷḷa vaḻivu*. The verse instead inserts the linking syllable *-attu-* (*cāriyai*), giving *uḷḷattu aḻivu*, "the ceasing of the mind". This link ties a thing to its ground: the stirring self always needs a support. *Aḻivu* means gone, never to rise again. A quiet mind alone is not the goal. When the root, the stirring self, ceases, the mind falls still of itself.

17. THE HONEY THAT RISES UNCEASINGLY

> அடுக்குந் தேன் என்பதில் அடுக்கும் என்பது அடுத்தல் என்னும் தொழிற்பெயர்க்கண் தல் விகுதி தன்னொற்றுச் சந்தியொடு நீங்க எதிர்காலப் பெயரெச்ச இடைநிலை உம்மை ககரமெய்ச் சாரியை யூர்ந்து தன்னொற்றுச் சந்திபெற்று ஆண்டு நின்று இறையும் இடைப்பாடு தோற்றாது செறிதற்

பெயர்ச்சியும், அடுக்கல் என்னும் தொழிற்பெயர்க் கண் அல் விகுதி நீங்க அவ் வெதிர்காலப் பெயரெச்ச இடைநிலை உம்மை விகுதி நீங்க நின்று தன் வரவு கண்டோடிய குற்றுகரமூர்ந்த மெய்க்கண்ணேறி நின்று இறையும் இடைப்போதின்மை படாது பன்முறை மேன்மேலுறுதற்பெயர்ச்சியும் பொருளாகக்கொண்டு இருவகைப் பகுதி யொருவகை யெச்சமாக நிற்றலின், சிறிதும் இடத்தானும் காலத்தானும் பிரிவு தோன்றாது செறிந்து பன்முறை மேன்மேலெழும் ஆனந்தத் தேனென்று குறித்ததென் றுணர்க.

உள்ளத் தழிவி லடுப்பது ஆனந்த மாகலின் தேனென்பதை உவமக் குறிப்பால் சிவானந்தத்தேன் என்ற தென்று உணர்க.

தேனுண்ட வண்டு அசைவின்றி அத்தேன்மயமாயிருத்தல் போல, ஆனந்தானுபவத்தர் போத அசைவின்றி இவ்வானந்த மயமா யிருத்தலின் உவமையாகக் குறிக்கப்பட்ட தென்று உணர்க. இதனை யொப்புமைக் கூட்ட மொட்டாதிகளாகக் கூறுவாறும் உளராலோ எனின், அவ்வாறு கூறினும் பொருள் சிதையாமையின் ஒருவாறு அமையும் என்க. போத அசைவின்கண் தோற்றல் விடயானந்த மாகலில், போத ஒழிவின் கண் தோற்றல் சிவானந்த மெனக் குறித்தற்கு உள்ளத் தழிவில் அடுக்குந் தேன் என்ற தென்று உணர்க. எங்ஙனமெனின், உள்ளத் தழியாமையின் அடாத் தேனென்று எதிர்மறுக்கப் படுதலின் என்க. மதுரம் பற்றித் தேனை ஆனந்தத்திற்கு உவமை கூறுவாரும் உளராலோ எனின் அது நா விடயமாய் இறைப்போது நிற்றலின் இத்துணைச் சிறப்பின்று என்க.

TRANSLATION – In *aṭukkun tēṉ*, "the honey that rises close", the word *aṭukkum* is formed in two ways. From the verbal noun *aṭuttal*, the ending *-tal* drops with its own consonant of junction; the future relative-participle sign *-um* rides on the euphonic consonant *k* and takes its own junction; and so it stands, meaning "to press close, showing not the least gap". From the verbal noun *aṭukkal*, the ending *-al* drops; the same future sign *-um*, its own ending

gone, mounts the consonant that the short *u* had ridden, which fled at its coming; and so it means "to rise upon itself again and again, with not even a moment's interval". Since two roots stand here as one participle, know that it indicates the honey of bliss that is dense, showing no break in place or in time, and that rises upon itself again and again.

Since what draws close where the mind has ceased is bliss, know that by the suggestion of comparison "honey" means the honey of Siva-bliss.

As a bee that has drunk honey stays without movement, filled with that honey, so those who experience bliss stay without the stirring of knowing, filled with that bliss; know that honey is set as a comparison for this reason. Some explain it as an ornament of joined likeness, of implied comparison and the like. Even if they do so, since the meaning is not marred, it fits in a way. What appears while knowing stirs is sense-pleasure; to indicate that what appears when knowing has ceased is Siva-bliss, the verse says "the honey that rises close where the mind has ceased". How? Because the converse follows: where the mind has not ceased, the honey does not rise. Some compare honey to bliss for its sweetness. That has not this excellence, because sweetness is an object of the tongue and stays only for a moment.

COMMENTARY – This is the heart of the verse. One word, *aṭukkum*, holds two roots: *aṭu*, to cling close, and *aṭukku*, to pile layer on layer. So the honey is close, with no gap in place or time, and rises upon itself without end. It is the honey of Siva-bliss. A bee that has drunk is still and full; so is the soul whose restless knowing has ceased. The sweetness of the tongue lasts a moment, and the pleasures of the stirring self are pleasures of the senses. This honey rises only where the self has fallen silent, and it never runs out.

18. ALL WHO LOVE MAY TASTE IT

> அன்பரெலா முண்ண என்பதில், அன்பர் என்பது பொருள் புகழாதியைக் குறித்துப் பயில்வோரை நீக்கிச் சிவானந்தம் எந்நாள் அடைதும் என்று இடைவிடாது அதனையே விரும்பிப் பயில்வோரைக் குறித்ததென்று உணர்க. எலாம் என்பது சரிதாதி கன்ம மார்க்கங்களைக் கூறும் பிற நூல்களெல்லாம் பருவம் நோக்காது சாதி சமயாசார விகற்பங்களை நோக்கிச் சிலரை நீக்கியும் சிலரை நிறுவியும் அதிகரித்தல் போலாது அச்சாதிசமயாதிகளில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாரேனும் பருவத்தராயின் இந்நூற்கு உரியராவர் என்பது குறித்தது என்று உணர்க.
>
> உட்கொள என்னும் பொருளுட்கொண்டு பொருட்டுப் பொருளிற் போந்த உண்ண என்னும் வினையெச்சம் ஆனந்தானுபவத்திற்கு விடாத இலக்கணை யாயிற்று என்று உணர்க. என்னை எனில், உண்ணலில் பசி நீங்கல் போல் ஆனந்தானுபவத்திற் பசுத்துவ நீங்கலின் என்க.

TRANSLATION – In *aṉparelā muṇṇa*, "so that all who love may taste": *aṉpar*, "those who love", shuts out those who practise for wealth, fame and the like, and indicates those who practise unceasingly, desiring that alone: "When shall we reach Siva-bliss?" *Elām*, "all", indicates this. Other books, which teach the paths of action (*kaṉma mārkkam*), charya and the rest, do not look to ripeness; they look to the distinctions of caste, religion and custom, shutting out some and admitting some. This book is not like them: whoever is high or low in those castes and religions, if they are ripe, is entitled to this book.

Know that the infinitive *uṇṇa*, "to taste", which carries the sense "to take within" and stands in the sense of purpose, became an unbroken figure for the experience of bliss, one that keeps its literal sense. Why? As eating takes away hunger, the experience of bliss takes away the soul's bound state (*pacuttuvam*).

COMMENTARY – Love is the only qualification. Those who seek wealth or fame are not "those who love"; those who long day and night for Siva-bliss are. Caste and religion do not decide who may receive this wisdom; ripeness does. Here, at twenty-eight, Vallalar already reads the word "all" against the walls of caste and religion. Later he would say plainly that caste, sect and religion are false. "To taste" is meant literally as well as figuratively: as food ends hunger, bliss ends the soul's bondage (*pacuttuvam*, the state of the bound soul).

19. THE BOOK HE SPOKE

பயன் காரணம் பற்றி வந்த ஒழிவிலொடுக்கநூல் என்பது ஒழிவிலொடுக்க மென்னும் நூல் ஒழிவிலொடுக்கந் தரு நூல் என இரு வழிக்கும் பொதுவாய சந்தியால் வந்தமையில், தன்னை வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் பொதுவென்று குறித்த தென்று உணர்க.

ஒழிவிலொடுக்கநூ லுரைத்தான் என்பதில் வேற்றுமை சாரியை உருபு முதலிய ஒன்றும் விரியாது நிற்றலின், ஞானாசார மன்றிக் கருமாசார மொன்றும் விரியாத இந்நூலின் நின்மலத் தன்மை தோன்றிற்றென்று உணர்க. உரைத்தான் என்பது ஒருவர் மதி நுட்பத்தால் தாம் கண்டறிந்த மாற்றுயர்ந்த பொன்னின் தன்மையைப் பிறரும் அறிந்து பயன் கோடற்குக் கட்டளைக்கல்லில் உரைத்துக் காட்டல் போல், சுருதி குரு அனுபவத்தால் தாம் அனுபவித் தறிந்த சிவானந்தப் பேற்றின் தன்மையைப் பக்குவரும் அறிந்து பயன் கோடற் பொருட்டு நூற்கண் உரைத்துக் காட்டினார் என்று குறிப்புறுத்திற்று என்று உணர்க.

என்னெனில் உரை என்பது பொன்னுரையும் பொருளாகக் கோடலின் என்க. உரைத்தான் என்னும் பயனிலை செயப்படு பொருளின் இறுதியில் இயையாது செயப்படு பொருட்கும் கருவிப் பொருட்கு மேல் தாடலைமேல் வைத்து என்பதன் இறுதியில் தொடர்ந்து நின்றது என்னெனின், சிவஞானத்

> *தீக்கை யுடையராய் உரைத்தா ரென்பது மன்றித் தமதாசாரியர் திருவடி சான்றாகத் தாம் கண்ட அனுபவத்தை விளங்க உரைத்தா ரென்பதும் குறித்தற்கு என்க. என்னை? தாடலை மேல் வைத்து எனவே சான்றாக வைத்து என்பது தானே அமையுமாகலின்.*
>
> *தலைமேல் வைத்து என்பதன்பின் நிற்கக் கடவதாய ஓர்ந்து என்பது செயப்படு பொருட்பின் இறுதி நிலையாய் நின்றது என்னெனின், இந்நூல் கற்றோர்க்குக் கருமங்குறைந்து ஞானமேலிடுதலுண்மை குறித்தற்கு என்க. எங்ஙனம் எனின், அவ்வோர்ந்து என்பது வினைக்குறையாகலின் என்க. 'உள்ளத்தழிவி லடுக்குந் தேனை யன்பரெலா முண்ண வொழிவிலொடுக்கநூ லோர்ந்துரைத்தான்' எனக்கொண்டு போத ஒழிவின்கண் அடுப்பதாய ஆனந்தத்தை அன்பரெல்லாம் அனுபவிக்கும் பொருட்டு வேதாகம முடிபான ஞானநெறியை ஆராய்ந்து ஒழிவிலொடுக்கம் என்றோர் நூலை உரைத்தார் எனப் பொருள் கூறுவாரும் உளர். அங்ஙனங் கூறின் ஆசிரியர் பரஞானமுடையா ரென்பது தோற்றாது அபரஞான முடையாராகப் பொருள்படு மாகலினும், அபரஞானத்தாற் கூறப்பட்ட நூல் மிகச் சிறவாமையானும் அது பொருந்தாதென்க.*

TRANSLATION – The title Ozhivilodukka nūl, given for its fruit and its cause, came by a junction common to two readings: "the book named Ozhivilodukkam" and "the book that gives Ozhivilodukkam". Know that by this it marks itself as common to Vedanta and Siddhanta.

In *oḻiviloṭukkanū luraittāṉ*, "he spoke the book Ozhivilodukkam", no case sign, euphonic increment, ending or the like is unfolded. Know that this shows the stainless (*niṉmalam*) nature of this book, in which only the conduct of wisdom (*ñāṉācāram*) unfolds and no conduct of ritual action (*karumācāram*) unfolds at all. *Uraittāṉ*, "he spoke", carries this suggestion: as a man who by sharpness of mind has found gold of high fineness rubs it on the touchstone, so that others too may know its quality and profit by it, so the author, by scripture, guru and experience, showed in the

book the nature of the attainment of Siva-bliss that he had known by experience, so that the ripe too might know it and profit.
For *urai* also means the rubbing of gold. Why does the predicate *uraittāṉ* not join at the end of the object, but follow at the end of "placing on his head", which comes before the object and the instrument? To indicate that he spoke as one who had received initiation into Siva-wisdom, and also that he spoke clearly what he had experienced, with his teacher's holy feet as witness. Why? Because "placing on the head" carries of itself the sense "placing as witness".
Why does *ōrntu*, which ought to stand after "placing on his head", stand at the very end, after the object? To indicate the truth that for those who learn this book, karma lessens and wisdom rises above it. How? Because *ōrntu* is a "lessening of action" (*viṉaikkuṟai*), a verb left incomplete.
Some take the verse as "So that all who love may taste the honey that rises close where the mind has ceased, he discerned and spoke the book Ozhivilodukkam", and explain: "So that all who love may experience the bliss that draws close where knowing has ceased, he examined the path of wisdom, the conclusion of the Vedas and Agamas, and spoke a book called Ozhivilodukkam." If one says so, it would not show that the author has supreme knowledge (*parañāṉam*); it would mean that he has lower knowledge (*aparañāṉam*). And a book told by lower knowledge is not of high excellence; so that does not fit.

COMMENTARY – Ozhivilodukkam: *oḻivu*, cessation, and *oṭukkam*, subsiding: the stillness of the self where its stirring has ceased. The title reads two ways, "the book called Ozhivilodukkam" and "the book that gives it", and so serves both Vedanta and Siddhanta. The verse uses bare words, with no grammatical additions, like a book of wisdom with no ritual added. *Urai* means both "to speak"

and "to rub on the touchstone": the author proves his gold, the bliss he knew, so that others may see it is real. His guru's feet on his head stand as witness. Grammar calls *ōrntu* a *viṉaikkuṟai*, an incomplete verb; the word also means "a lessening of karma". Vallalar rejects the reading in which the author merely studied the scriptures: he spoke from direct knowing (*parañāṉam*), not book learning (*aparañāṉam*).

20. THE ORDER OF THE WORDS

> இந்நூல் இயற்றற்கேற்ற நற்பொருளுடைமையுஞ்
> சிறப்புப்பாயிர இலக்கணத்துள் ஆக்கியோன் பெயரே என
> முதனிறுத்தப்பட்ட நிமித்த காரணச் சிறப்புடைமையும்
> இச்செய்யுள் முடிபுக்கு எழுவாயாந் தலைமை யுடைமையும்
> பற்றி வள்ளல் என முதல் நிறுத்தியது என்க.
> இந்நூலாசிரியர்க்கு ஆசாரியர் இவரென்பது தோன்றற்கு
> அவ்வள்ளல் என்பதன்புடை குருராயன் என்பதை நிறுத்திய
> தென்க. இங்ஙனம் ஆசாரிய ரென்பவர் பிள்ளையார் என்பது
> தோன்றற்கு ஞானசம்பந்தனென வைத்தல் வேண்டுமாகலின்
> அந்த ஞானத்தைக் குறிக்கும் பாசவெற்றியாய 'வாது வென்ற'
> என்பது முன் கூட்டிச் சம்பந்தன் என அதன்புடை நிறுத்திய
> தென்க. இரண்டாம் அடிக்கண் பிள்ளையார் தாள்கள் நிறுத்தத்
> தொடங்கி முன்னர் அத்தாள்களின் இயற்கை அருளென்று
> குறிக்க வள்ளல் என்றும், அதன் வடிவம் ஆனந்த மென்று
> குறிக்க மலரென்றும் முறையே வைத்து வள்ளல் மலர்த்தாள்
> என நிறுத்தியதென்க. தாள்களன்றியும் பிள்ளையாரும்
> அருளியற்கையரே என்பது குறிக்கச் சம்பந்தனென்னுஞ் சத்தந்
> தோற்றியவுடன் வள்ளற் சத்தந் தோன்ற நிறுத்தியதென்க.
> இங்ஙனம் நிறுத்தியவை சொற்பொருண் முறைநிலை. தாள்
> என்பதற்கும் தலை என்பதற்கும் உள்ள சொற்பொருள் சம்பந்த
> இன்பம் பற்றித் தாடலை என்றும், தலை என்பதற்கும்
> மேலென்பதற்கும் உள்ள உரிமை நோக்கம் பற்றித்
> தலைமேலென்றும், மேலென்னும் இடப் பொருட்கு
> வைத்தற்றொழில் சிறந்தது பற்றி மேல்வைத்து என்றும்,
> வைத்து என்பதற்கும் உரைத்தான் என்பதற்கும் இறுதியும்

> முதலும் இனமாதல் பற்றி வைத்துரைத்தான் என்றும் முறையே நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொன்முறை நிலையும் சொற்பொருண்முறை நிலையுமாம். இங்ஙனம் முற்றும் முறை நிலை கூறப்புகின் மிகப் பெருகுமாகலின் ஒருவாறு காட்டினம். மற்றையவும் இவைகொண்டு உணர்க என்க.

TRANSLATION – Vallal is placed first because it has good meaning fit for the making of this book; because it has the special standing of the instrumental cause, which the rules of the special preface place first, "the name of the maker"; and because it has the headship of being the subject of the verse's sentence. Next to Vallal he placed Gururayan, to show that this is the teacher of the book's author. To show that this teacher is Pillaiyar, he would have to say Jnanasambandan; so he set first "who won the debate", the victory over bondage (*pācam*) that points to that wisdom (*ñāṉam*), and placed Sambandan beside it. In the second line, beginning to set down Pillaiyar's feet, he first placed *vaḷḷal*, to indicate that the nature of those feet is grace, and then *malar*, to indicate that their form is bliss; so he set down *vaḷḷal malarttāḷ*, in that order. To indicate that Pillaiyar himself, not his feet alone, is of the nature of grace, he placed the sound *vaḷḷal* so that it sounds as soon as the sound Sambandan has appeared. These placings are the order of word-meaning. For the delight of the relation in meaning between *tāḷ*, "feet", and *talai*, "head", he set *tāṭalai*; for the natural fit between *talai* and *mēl*, "on", *talaimēl*; since the act of placing suits the place-meaning of *mēl*, *mēl vaittu*, "placing on"; and since the end of *vaittu* and the beginning of *uraittāṉ* are of one kind, *vaitturaittāṉ*. These placings are the order of words and the order of word-meaning. To tell all the order in this way would grow very long, so we have shown it in some measure. Understand the rest from these.

COMMENTARY – Every word stands where it does for a reason, of sound and of sense. The author comes first as the instrumental cause of the book, its maker, as the potter is of the pot; Tamil grammar's list for a special preface also begins with "the name of the maker". "Who won the debate" stands for the "wisdom" (*ñāṉam*) in Jnanasambandan: victory over bondage is the sign of wisdom. The word for the relation between feet and head, *campantam*, is the very name Sambandan. *Vaittu* ends in u and *uraittāṉ* begins with u, so they join.

21. THE THEME OF NOBILITY

> *இச்செய்யுட் பொருள் ஆசிரியரது அருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானும் குறிப்பானும் விளங்க விரித்தலின் வாகைத் திணையுள் சால்பு முல்லைப் பொருளின்பாற் பட்டதென்க. என்னை? "சால்பு முல்லைப் பொருள்; வான்றோயு மலையன்ன சான்றோர்தஞ் சால்புரைத்தன்று" என்பவாகலின்.*

TRANSLATION – The meaning of this verse unfolds the greatness of the author's grace-knowledge, openly and by suggestion; so it belongs to the subject of *cālpu mullai* within the theme of *vākai*. Why? Because they say: "*Cālpu mullai*: it tells the nobility of the noble, who are like mountains that touch the sky."

COMMENTARY – Classical Tamil poetry on outer life (*puṟam*) is sorted by theme (*tiṇai*). *Vākai* is the theme of excellence and victory; *cālpu mullai* is the part of it that praises nobility of character. The definition is quoted from the Purapporul Venbamalai (185). The author's victory is over bondage, won by grace.

22. WHAT THE METRE SHOWS

இச்செய்யுள் தன்னுள் செயப்படு பொருளாய் நின்ற நூற்சிறப்பைத் தன்னாலும் தன்னுறுப்புக்களாலும் குறிப்பாற் குறித்து நின்ற நன்னோக்குடைச் செய்யுள் என்று உணர்க. அங்ஙனம் குறித்தவை எங்ஙனமெனின்:-

இச்செய்யுள் தான் கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா என்னும் முப்பாவினும் சிறந்த வெண்பாவாகலின், இக்குறிப்பால் இந்நூல் சரியைநூல், கிரியைநூல், யோகநூல் என்னும் முந்நூலினும் சிறந்த ஞானநூல் என்று குறித்தது என்க.

தான் ஈரசையான் ஆசிட்டு இருவகைத் தளைதழீஇ ஒழுகிசைச் செப்பலோசையான் வந்ததாகலின், இக்குறிப்பால் இந்நூல் ஆகம முடிவும் வேதமுடிவும் கூறும் இருவகை நெறியும் ஒருவகை நெறியாத் தழீஇக் கொண்டிருந்தமை குறித்தது என்க.

தான் ஒன்றடுத்த இரட்டை முப்பத்தா றெழுத்துக்களைக் கொண்டு நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் பாசமொன் றடுத்த தத்துவ முப்பத்தாறென்றும் முப்பத்தாறன் தன்மை இவையென்றும் பகுத்தறிதல் வகையு முணர்த்துவ தெனக் குறித்த தென்க.

தான் நான்கடுத்த முப்பத்தாறு அசைகளை அசைத்து நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் அத்தத்துவ முப்பத்தாறனையும் நியதி களைதல் முறையை உணர்த்துவ தெனக் குறித்தது என்க. அஃதேல் முப்பத்தாறன்மேல் நான்கடுத்தது என்னெனின், ஆன்ம தத்துவத்தின் வன்மை தோன்றற்கு ஓரசையும், வித்தியா தத்துவத்தின் வலி தோன்றற்கு ஓரசையும், நாத தத்துவத்தின் பெருமை தோன்றற்கு ஈரசையும் மிகுந்தன என்க.

TRANSLATION – Know that this verse is a verse of good intent: by itself and by its parts it points, by suggestion, to the excellence of the book that stands as its object. How it points to it:

This verse is a venba, which excels the three metres kalippa, vanjippa and asiriyappa. By this sign it indicates that this

book is a book of wisdom, which excels the three kinds of book: books of charya, of kriya and of yoga.
It is built on the two kinds of syllable-unit (*acai*), embraces the two kinds of linkage (*taḷai*), and comes in the flowing form of the venba's speaking rhythm (*ceppalōcai*). By this sign it indicates that this book holds as one path the two paths told by the conclusion of the Agamas and the conclusion of the Vedas.
It has thirty-six letters doubled, with one more. By this sign it indicates that this book teaches the way of discerning: "These are the thirty-six tattvas, with bondage (*pācam*) joined to them as one", and "These are the natures of the thirty-six".
It moves through thirty-six syllable-units with four more. By this sign it indicates that this book teaches the ordered way of removing all those thirty-six tattvas. If it is asked why four are added to the thirty-six: one unit more shows the strength of the soul tattvas (*āṉma tattuvam*), one the force of the knowledge tattvas (*vittiyā tattuvam*), and two the greatness of the Nada tattvas.

COMMENTARY – Now the shape of the verse itself speaks. Tamil has four chief metres, and the venba, strictest of them, matches wisdom (*ñāṉam*), highest of the four ways of charya (service), kriya (worship), yoga and jnana. An *acai* is a syllable-unit: *nēr* (one syllable) or *nirai* (two, the first short). *Taḷai* is the link between one foot and the next. All Tamil verse is built from these two units, and the venba allows only two kinds of link; so the book holds the two conclusions, Siddhanta and Vedanta, as one path. The verse has 73 letters: 36 tattvas, their 36 natures, and bondage. Saiva teaching counts 36 tattvas in three groups: 24 of the soul, 7 of knowledge, and 5 pure ones headed by Nada. The extra units honour each group.

23. WHAT THE FEET AND LINES SHOW

தான் பதினைந்து சீர் சீர்கொள நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் ஆசாரியத் தன்மை, சீடத்தன்மை, பதித்தன்மை, பசுத்தன்மை, பாசத் தன்மை, உபதேசத் தன்மை, பக்குவத்தன்மை, யோக நிவர்த்தி, கிரியை நிவர்த்தி, சரியை நிவர்த்தி, விரத்தி விளக்கம், துறவுத் தன்மை, அருளவத்தைத் தன்மை, வாதனை மாண்டார் தன்மை, நிலை இயல்பு என்னும் இப் பதினைந்தனையும் சீர் பெறக் கொண்ட தெனக் குறித்தது என்க.

தான் எழுவகைத் தளையின் இயைந்த தாகலின், இக்குறிப்பான் இந்நூல் ஆன்மதரிசனம், அருட்டரிசனம், பரை தரிசனம், பரையோகம், பரையோக நீக்கம், போத ஒழிவு, இன்பப்பேறு என்னும் எழுவகை நிலையும் அறிவிப்ப தெனக் குறித்தது என்க.

தான் தனிச்சொல் பெற்று நான்கடியுடன் நடந்ததாகலின், இக்குறிப்பான் இந்நூல் கூறும் ஒப்பற்ற ஞானமும் சுத்தச்சரியை, சுத்தக் கிரியை, சுத்தயோகம், சுத்தஞானம் என நான்கு பாதத்தோடு நடப்பதெனக் குறித்தது என்க.

தான் ஒரூஉத்தொடையொடு முத்தொடையான் இயன்றதாகலின், இக்குறிப்பான் இந்நூல் சுருதி குரு அனுபவம் என்னும் மூன்றும் ஒத்தியன்ற தெனக் குறித்தது என்க.

அல்லதூஉம், இச்செய்யுள் அடி நேரடியாய் விதித்த எழுத்தெல்லையின் இகவாது நிற்றலின், இக்குறிப்பான் இந்நூல் மெய்வீட்டின் நெறித்தாய் அவ்வீட்டின் நெறிக்கு எல்லையாய ஞானத்தின் இகவாது நின்றது எனினுமாம் என்க. எல்லை என்னெனில், "பத்தெழுத்தென்ப நேரடிக்களவே, ஒத்த நாலெழுத் தொற்றலங் கடையே" என்பவென்க. இங்ஙனங் குறித்தற் கன்றே இச்செய்யுள் ஈற்றடியில் நூற்பெயரை வேறு அடை கொடாது தனிமையில் நிறுத்தியது என்க.

TRANSLATION – It stands in fifteen feet (*cīr*), with excellence (*cīr*). By this sign it indicates that this book has

taken in, with excellence, these fifteen: the nature of the teacher, the nature of the disciple, the nature of the Lord (*pati*), the nature of the soul (*pacu*), the nature of bondage (*pācam*), the nature of instruction, the nature of ripeness, the ceasing of yoga, the ceasing of kriya, the ceasing of charya, the clear showing of dispassion, the nature of renunciation, the nature of the state of grace, the nature of those in whom latent impressions have died, and the nature of the final state.

It is joined by seven kinds of linkage (*taḷai*). By this sign it indicates that this book makes known seven states: the vision of the soul, the vision of grace, the vision of Parai, union with Parai, the leaving of union with Parai, the ceasing of knowing (*pōta oḻivu*), and the attainment of bliss.

It has the detached word (*taṉiccol*) and moves on four lines (*aṭi*). By this sign it indicates that the peerless wisdom this book tells also moves on four feet: pure charya, pure kriya, pure yoga and pure jnana.

It is made with three kinds of sound-linkage (*toṭai*), together with the spaced linkage (*orūut toṭai*). By this sign it indicates that this book is made with scripture, guru and experience in accord.

Or again: the lines of this verse are standard lines (*nēraṭi*) and do not pass beyond the letter-limit laid down. By this sign it may indicate that this book is of the path of true liberation and does not pass beyond wisdom, the limit of that path. What is the limit? They say: "Ten letters, they say, is the measure of the standard line, with four letters more alike, consonants not counted." It is to indicate this that the last line of the verse sets the book's name alone, with no other epithet.

COMMENTARY – A *cīr* is a metrical foot, and the same word means excellence; the venba's fifteen feet match the fifteen subjects Vallalar finds in the book. Tamil prosody counts seven kinds of *taḷai* in all; Vallalar does not explain the

count here. Parai is the supreme power of grace. *Aṭi* means both a line and a foot: the four lines are the four feet on which wisdom walks, the pure forms of charya, kriya, yoga and jnana. The *taṉiccol* is the detached word that ends line 2 (*-ṉuḷḷat*). *Toṭai* are the sound-patterns, such as rhyme and alliteration, that bind a verse; they stand for the three witnesses, scripture, guru and experience. The rule of line-length is from the Tolkappiyam (Seyyuliyal 38): a standard line holds ten to fourteen letters, not counting bare consonants.

24. THE EIGHT PARTS OF A SPECIAL PREFACE

> *இச்செய்யுள் சிறப்புப் பாயிரத்தது ஆயின்*
> *அப்பாயிரத்திலக்கணம் இதனுள் இருந்தவாறு எங்ஙனம்*
> *என்னின்:- வள்ளல் என்பதனால் ஆசிரியர் பெயரும்,*
> *குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த்தா*
> *டலைமேல் வைத்துரைத்தா னென்பதனால்*
> *ஞானாசாரியராகிய பிள்ளையார் அருளுபதேச வழித்தென*
> *உட்கொளப்படுதலின் வழியும், இந்நூற்றொடர் தமிழ்த்தொட*
> *ராகலின் இத்தமிழ் வழங்கு நிலமே இந்நூல் வழங்கு*
> *நிலமெனக் கருதப்படுதலின் எல்லையும், ஒழிவிலொடுக்க*
> *நூல் என்பதனால் நூற்பெயரும், ஒழிவிலொடுக்கமென*
> *அன்மொழித்தொகைப் பெயர் மாத்திரையின் நில்லாது*
> *நூலென விரித்தமையின் இந்நூலுந் தொகை விரி யுடைய*
> *தெனக் கருதப்படுதலின் யாப்பும், உள்ளத் தழிவில்*
> *என்பதனாற் கருதிய பொருளும், அன்பரெலாம் உண்ண*
> *என்பதனால் அன்பரெலா முணற்பொருட்டு இஃதியற்றுக*
> *என்று உள்ளெழுந்து எதிரிட்டு நின்றது ஆசிரியரது*
> *பெருங்கருணை எனக் கருதப்படுதலின் கேட்போரும், உள்ளத்*
> *தழிவில் அடுக்குந்தேன் என்பதனால் பயனும் புலப்படு*
> *மாகலின்; அவை இருந்தவாறு இங்ஙனம் என்க.*

TRANSLATION – If this verse is a special preface, how is the definition of the preface present in it? By *vaḷḷal*, the author's

name. By "Gururayan, Sambandan who won the debate: placing his bountiful flower-feet on his head, he spoke", it is understood that the book came by way of the gracious teaching of Pillaiyar, the teacher of wisdom: this is the line (*vaḻi*). The words of this book are Tamil, so the land where this Tamil is spoken is taken to be the land where this book is current: this is the boundary (*ellai*). By "the book Ozhivilodukkam", the book's name. It does not stop at the bare compound name (*aṉmoḻittokai*) Ozhivilodukkam but unfolds it with *nūl*, "book"; so this book too is taken to have both compression and expansion: this is the form (*yāppu*). By "where the mind has ceased", the subject intended. By "so that all who love may taste", the hearers: for it is taken that what rose up within the author and stood before him, saying "Make this, so that all who love may taste it", was his great compassion. By "the honey that rises close where the mind has ceased", the benefit. All these become clear; this is how they are present.

COMMENTARY – Tamil grammar asks a special preface to show eight things: the author, the line of teaching, the boundary, the title, the form, the subject, the hearers and the benefit. Vallalar finds all eight in four lines. An *aṉmoḻittokai* is a compound that names something outside its own words, as "Bluebeard" names a man, not a beard. "Ozhivilodukkam" names a book; adding "book" opens the compound, the sign of a work that both condenses and unfolds. The hearers are defined by compassion: the book exists because great compassion rose in its author, that all who love might taste the honey. This is the compassion Vallalar later made the foundation of his path, Jeevakarunyam, compassion for all living beings.

25. THE COLOPHON

இப்பாயிரச் செய்யுள் முற்காலத்தது. இவ்வுரை சி. இராமலிங்க பிள்ளை யவர்களாற் செய்யப்பட்டது

ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி முற்றிற்று

TRANSLATION – This preface verse is of an earlier time. This commentary was made by C. Ramalinga Pillai. The Commentary on the Preface Verse of the Ozhivilodukkam is complete.

COMMENTARY – C. Ramalinga Pillai is Vallalar himself, under the name he bore in 1851, when at twenty-eight he first printed the Ozhivilodukkam; later he signed himself Chidambaram Ramalingam. The verse is older; he only explains it. The man who here explains why the author is called Vallal, the bountiful giver, came himself to be called Vallalar.

26. APPENDIX: PLAIN MEANINGS FOR OBSCURE WORDS

இந்நூல் உரைபாடத்திற் சிலசில இடங்களிலுள்ள மறைசொற் பொருட்குத் தெளிசொற் பொருள்

1. பவுரிக்கூத்து - வலமிடமாகச் சூழ்ந்தாடுங் கூத்து.

குறுமன்னியர் - சிலரால் அறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவ முடையோர்.

மகாமன்னியன் - பலராலும் அறிந்து மதிக்கப்படும் பிரபுத்துவமுடையோன்.

பிரளயாகலர் - மும்மலங்களுள் ஒருமல நீத்தோர், அவர் பிரமன் முதலானோர்.

2. ஞாதுரு - காண்பான், ஞானம்-காட்சி, ஞேயம்-காணப்பட்டது.

3. சூக்குமை வாக்கு - வார்த்தை தோன்றற்கு முதற்காரணமாய் உந்தியிலே நாதவடிவாய் நிற்கும் ஒரு சத்தி.

பகடிக் கூத்து - உள்ளது போன்று இல்லாததைக் காட்டும் வெளிவேடம் அல்லது அகசியக் கூத்து

4. பரஞானம் - அனுபவஞானம், அபரஞானம்-வாசகஞானம்.

5. அரிப்பாளன் - குப்பை முதலிய இடங்களில் பொன் முதலிய அரித்தெடுக்கின்றோன்.

கொழுந்தாடை - கரும்பின் நுனித்தழை

10. சாயாபுருடன் - தன் நிழலைப் பார்த்துப் பின் ஆகாயத்தை உற்று நோக்குகின்றார்க்கு அவ் வாகாயத்தின்கண் புருட வடிவம் போல் தோன்றும் அந்நிழற் காட்சி.

12. பைமறித்தல் - உள்ளிருந்த சரக்கு வெளிப்படப் பைவாய் தொட்டு உட்புறம் மேற்பட்டும் வெளிப்புறம் உட்பட்டும் மடங்க மடக்கல்.

16. கிண்கிணி வாய்செய்தலர்தல் - வட்ட வடிவாக முகங் கொண்டு மலர்தல்.

21. பஃறுளை - பலதுளை.

42. பற்ற - பார்க்கிலும்.

43. அருகித் தோற்றல் - சுருங்கித் தோற்றல்.

52. பிரேரகம் - காரியப்படுத்தல்.

54. பிரதிபலிதம் - எதிர்பிம்பம்.

56. சகச மலம் - அனாதியாகிய மலம்.

65. கடா - வினா.

66. விட்டிசையா திசைத்தல் - நடுவே நில்லாமல் ஒலித்தல்

67. நக்கினம் - நிருவாணம்.

80. தேறிட்ட நீர் - தேற்றாங்கொட்டையால்
தெளிவிக்கப்பட்டநீர்.

99. கவுசனை - யாதாயினும் ஓர் பொருளை உள்வைத்து மறைய மேல்மூடிக்கட்டும் மேற்கட்டு.

TRANSLATION – Plain Words for the Meaning of Obscure Words in Some Places of the Commentary of This Book

1. *pavurikkūttu* (a circling dance): a dance danced circling from right to left.

kuṟumaṉṉiyar (lesser lords): those holding lordship who are known and honoured by a few.

makāmaṉṉiyaṉ (a great lord): one holding lordship who is known and honoured by many.

piraḷayākalar (the Pralayakalas): those who have shed one of the three impurities (*malam*); they are Brahma and the others.

2. *ñāturu*: the one who sees; *ñāṉam*: the seeing; *ñēyam*: what is seen.

3. *cūkkumai vākku* (subtle speech): a power (*catti*) that stands at the navel in the form of sound (*nātam*), as the first cause from which words arise.

pakaṭik kūttu (a mock play): an outward disguise that shows what is not as though it were; or a comic play.

4. *parañāṉam* (higher wisdom): wisdom of experience; *aparañāṉam* (lower wisdom): wisdom of words.

5. *arippāḷaṉ* (a sifter): one who sifts out gold and such things from rubbish heaps and similar places.

koḻuntāṭai: the leafy top of the sugarcane.

10. *cāyāpuruṭaṉ* (the shadow-man): the sight of one's own shadow that appears in the sky like the form of a man, to those who look at their shadow and then gaze fixedly at the sky.
